**People's Watch**
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

19.06.2017

# பத்திரிகைச் செய்தி

**சமூகப் பணியில் குடிமைச் சமூகத்தின் பங்களிப்பை மேம்படுத்தி ஊக்குவிக்கும் அரசு சாரா அமைப்புகளின் குழு என்ற தலைப்பில் அய்.நாவின் தலைமையகம் நியூயார்க்கில் மக்கள் கண்காணிப்பக நிர்வாக இயக்குநர் ஹென்றி டிபேன் உரை நிகழ்த்துகிறார்.**

இன்று இரவு 07.30 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில் அகில உலக தலித் தோழமை கூட்டமைப்பு சார்பாக ஹென்றி டிபேன் பங்கேற்கிறார்.

அகில உலக தலித் தோழமை கூட்டமைப்பு சார்பாக 2007 இல் அளிக்கப்பட்ட மனு இன்று வரை நிலுவையில் உள்ளது. இது பற்றியே இன்றைய நிகழ்வில் பேசப்படும் என்று கூறப்படுகிறது.

அய்.நாவில் உறுப்பு நாடாக இருக்கும் இந்தியா இம்மனுவை நிலுவையில் வைத்திருப்பது இதனால் ஏற்படும் ஆக்கப்பூர்வ விளைவுகளைத் தடுப்பதாகும்.

இன்றைய நிகழ்வை இங்கிலாந்து, பிரான்ஸ், உருகுவே ஆகிய மூன்று நாடுகளுடன் மனித உரிமைக்கான அகில இந்திய பணிக்குழு, அகில உலக பொது மன்னிப்பு சபை, விடுதலை இப்போது OMCT, & FIDH, CIVICUS, Connectas, JBI ஆகியவை இணைந்து நடத்துகின்றன. இந்நிகழ்வில் கீழ்க்கண்டோர் உரை நிகழ்த்துகின்றனர்.

1. ஹென்றி டிபேன் – அகில உலக தலித் தோழமை கூட்டமைப்பு
2. இராபர்ட் மகோனே – பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு
3. ஜோனட் லவ் – சட்ட ஆதார மையம்
4. எலினா ஓபன்சா – மனித உரிமைகளுக்கான அகில உலக பணிக்குழு
5. கமிலா அசனோ – Connectas

இந்நிகழ்வை கீழ்க்கண்ட வலைத்தளத்தில் நேரடியாகக் காணலாம். https://webtv.un.org/

மேலும் விபரங்களுக்கு

திருமிகு. அலினா டிபேன் - 9717571075

திருமிகு. ஜெயக்குமார் - 9994368524